Impact Factor (QJIF): 8.47 E-ISSN: 2583-1615, P-ISSN: 3049-3498

International Journal of Research in Academic World

Received: 18/March/2026 IJRAW: 2026; 5(5):05-07 Accepted: 22/April/2026

# பண்டைத் தமிழர் வாழ்வியல் முறைகள்

*[1]முனைவர் ரா. ரங்கநாதன்

*[1]உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஈரோடு, தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்**

பண்டைய தமிழர் வாழ்வியல் முறைகள் இயற்கை, சமூக ஒழுக்கம், பண்பாடு மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக அமைந்திருந்தன. அவர்களின் வாழ்க்கை முறை ஐந்திணை நில அமைப்புகளின் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) அடிப்படையில் இயற்கையோடு இணைந்து இருந்தது. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தொழில் மற்றும் வாணிபம் ஆகியவை அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்கின. சமூக அமைப்பில் குடும்பம், உறவினமைப்பு, விருந்தோம்பல், வீர உணர்வு போன்ற பண்புகள் முக்கியத்துவம் பெற்றன. பெண்களுக்கு மதிப்பு அளிக்கப்பட்டு, கல்வி மற்றும் சமூக செயல்பாடுகளில் அவர்களின் பங்கு காணப்பட்டது. உணவு, உடை, குடியிருப்பு போன்றவற்றில் எளிமையும் இயற்கை சார்ந்த வாழ்க்கையும் பிரதிபலித்தன. மேலும், இலக்கியங்கள், கலைகள், மதநம்பிக்கைகள் மற்றும் திருவிழாக்கள் மூலம் பண்பாட்டு செழிப்பு வெளிப்பட்டது. சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர்களின் உயர்ந்த நெறிமுறைகள், சமூக ஒழுக்கம் மற்றும் இயற்கை நேசத்தை விளக்குகின்றன. மொத்தத்தில், பண்டைத் தமிழர் வாழ்வியல் முறைகள் இயற்கையோடு இணைந்த சமநிலையான, ஒழுக்கமிக்க மற்றும் பண்பாட்டுச் செழிப்புடைய வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன.

**முக்கிய சொல்:** பண்டைய தமிழர், வாழ்வியல் முறைகள், ஐந்திணை, வேளாண்மை, பண்பாடு, சமூக மதிப்புகள், சங்க இலக்கியம், மரபு, சுற்றுச்சூழல், பாரம்பரியம்.

## முன்னுரை

இக்காலத்தே தமிழ் மக்களிடையே பரவியுள்ள பழக்க வழக்கங்கள் கடல் கொண்ட தொன்னாடாம் குமரிக் கண்டத்தில் வாழ்ந்திருந்த தொல் பழந்தமிழர்களின் வாழ்வியலுக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே உள்ளன.இவை கொண்டு பண்டைத் தமிழ்ர் பண்பாடறிவது அரிதாகும்.

தமிழரின் பண்டைய பண்பாடு இன்று தலைமாறிவிட்டது.ஏனெனில் தமிழர் வாழ்க்கையில் ஆரியப் பண்பாடு பெருமளவும் ஆங்கிலப் பண்பாடு ஓரளவும் பின்னிப் பிணைந்து விட்டன.ஆகவே தமிழர் பண்பாட்டைத் தனிமைப் படுத்திக் காண்பது ஒவ்வாத ஒன்றாகிவிட்டது.எனவே இன்று இந்தியத் தேசியத் தலைவர்கள் எனப்படும் தமிழர் குமரி முதல் பனிமலை வரை யாவரும் இந்தியர் என்றும் ஒருமைப்பாடு உரைக்கின்றனர்.

இத்தகையோர் பண்டைத் தமிழர் நாகரிகம் பண்பாடு உணராதவரே அப்படியானால் இன்று தமிழரிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள் பெரும்பாலானவை தமிழர்க்குரியவையன்று என்பது உறுதி.

பண்டைத் தமிழர் வாழ்வியலை முழுமையாக அறிவதற்கு கருவிகள் எவையும் இன்றில்லை.சிந்துவெளியில் உள்ள அரப்பா மொகஞ்சதாரோ சங்குதாரோ ஆகிய இடங்களில் நடத்திய அகழ்வாய்வு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னர் சிந்து ஆற்றச் சமவெளியில் வாழ்ந்திருந்த திரவிடர்களின்

*Corresponding Author: முனைவர் ரா.ரங்கநாதன்

(தமிழர்களின்) நாகரிகத்தைப் புலப்படுத்துவதாயுள்ளதென ஆராய்ச்சியறிஞர் ஆய்வு செய்கின்றனர்.சிற்துவெளி நாகரிகம் என்னும் நூல் அதற்குச் சான்றாகும்.

**அக்காலக் கல்வி முறை**

அக்காலக் கல்வி முறை இக்காலம் போன்று இல்லை.மாணாக்கர் ஆசிரியர் இல்லத்தில் தங்கிக் கல்வி கற்றனர்.படித்தல் எழுதுதல் கணிதம் ஆகிய மூன்றுமே முதன்மையானவை.ஆசிரியர்க்குத் தேவையான உதவிகள் செய்தும் உறுபொருள் ஈந்தும் பயின்றனர்.

ஆசிரியர்-ஆசுஇரியர்ஸ்ரீஆசிரியர் அதாவது மாணாக்கரின் மனத்திலுள்ள அறியாமையாகிய குற்றத்தைப் போக்குபவர் எனப் பொருளாகும்.ஆசான் ஸ்ரீஆசுஆன.;அதாவது மாணவாக்கர்க்கு (கற்பதற்கு)பற்றுக்கோடு போன்றவன.;

**தகுதிகள்**

அறிவு திறன் நல்லொழுக்கம் பெருந்தன்மை சால்பு உடையோரே ஆசிரியராயிருந்தனர்கணக்காயர் ஆசான் என்றும் அழைக்கப்பெற்றனர். குலையில் தெளிவு கட்டுரைவன்மை நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சி உலகியல் அறிவு உயர்பண்பு முதலான இயல்புகள் உடையவர்களை ஆசிரியர் பணிக்குத் தக்கவராகத

**தெரிவு செய்தனர் மதித்தனர்.;**

இத்தகைய ஆசிரியரைத் தேடிப் பெற்றோர் தம் பிள்ளைகளைக் கல்விஅ பயில அவரிடம் ஒப்படைத்தனர்.

**காதல் வாழ்வு:-**

உலக வாழ்க்கையின் இன்றியமையாத பகுதி காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்து வாழும் வாழ்க்கையாகும்.தமிழில் உள்ள அகப்பொருள் நூல்கள் இதனை களவு கற்பு எனக் கூறுகின்றன.

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர்
இயல்பே”

என்கிறது தொல்காப்பியம் (நூற்பா 1038)

களவு என்பது இன்பம் பொருள் அறன் என்று சொல்லிய வகையில் அன்புடன் கூடிய குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை ஆகிய ஐந்து திணைகயோடு பொருந்திய காதல் வாழ்க்கையை ஆராயுமிடத்து வேத வழக்கினையுடைய ஆரியரிடத்து நிகழும் திருமண முறை எட்டனுள் இசைப்பாட்டு வகையுடன் இயைந்த நல்ல யாழிணையுடைய தம் மனைவியருடன் இணைபிரியா துறையும் கந்தருவரது மணவியல்புடன் ஒரு வகையில் ஒப்புமையுடையதாகும் என்பது திரள் பொருளாகும்.

இளமை நலஞ்செறிந்த கட்டிளங்காளை யொருவனும் கட்டிளம் பருவம் எய்திய எழில் மிக்க கன்னியொருத்தியும் தனியிடத்தில் ஒருவரையொருவர் சந்தித்து காதல் வயப்பட்டு பிறரறியா வண்ணம் இணைவிழைச்சி மேற்கொண்டு ஒழுகி வருவது களவு எனப்பட்டது.

இக்களவொழுக்கத்தை யறிந்த ஊரார் சிலர் மட்டில் பிறரறியாதபடி மறைவாக தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பழிச்சொல் அம்பல் எனப்படும்.அஃது பலராலும் அறியப்பட்டு பரவலாக பேசப்பட்ட போழ்து அலர் என்று கூறப்பட்டது.

இக்களவொழுக்கம் செவிலித்தாய் நற்றாய் ஆகியோரால் அறியப்பட்டு தந்தை தம்முன் ஆகியோர்க்கு அறிவிக்கப்பெறும்.அவர்கள் இசைந்து இருவரையும் வாழ்க்கைப்படுத்துவதும் உண்டு.மறுப்பதும் உண்டு.

அங்ஙனம் பெற்றோரும் உற்றோரும் அவர்களை வாழ்க்கை நெறிப்படுத்த ஒருப்படாவிடினஅக்காளையும் கன்னியும் உடன் போக்கு மேற்கொள்வதும் உண்டு.

இல்லையேல் பனைமரத்திலுள்ள கருக்கு மட்டகளால் குதிரை போல் உருவமைத்து அக்காதலன் எருக்கம்பூ மாலை என்ற மாலை அணிந்து அவன் விரும்பிய காதலியின் படம் வரைந்து கொடியைப் பிடித்துக் கொண்டு அதில் ஏறி ஊர்த்தெருக்கள் வழி வலம் வருவான்.கண்டோர் இரக்கப்பட்டு இந்த நல்ல பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுப்பதில் என்ன தடை? ஏனப்பேசிக் கொள்வதைப் பெண்ணின் பெற்றோர் அறிந்து மணஞ் செய்து வைப்பதும் உண்டு.

ஆவ்வாறு மணமுடிக்க ஒப்பாது பிடிவாதமாய் இருந்தால் அந்த இளைஞன் இறுதியில் வரைபாய்தலை மேற்கொள்வானாம்.அஃதாவது மலையில் ஏறிவிழுந்து உயிர்விட முயல்வானாம்.ஆனால் வரை பாய்ந்ததாக இலக்கியச் சான்றில்லை. மடல் ஊர்ந்தாலே மணம் முடித்து விடுவராம்.வரை பாய்ந்தால் காதலியின் பெற்றோர்க்கு நீங்காப் பழியுண்டாகும் என்ற அச்சம் போலும். மலையிலிருந்து விழுந்து சாகப்போகிறேன் என்று சொன்னாலே அஞ்சி மணம் முடிப்பாராம்.

**கற்பு:-**
களவு முறையில் நாளடைவில் பொய்ம்மையும் கள்ளமும் இழுக்கும் நேர்ந்தமையின் தமிழ்ச் சான்றோர் சடங்குகளுடன் கூடிய கற்பு முறையை வகுத்தனர்.இதனைத் தொல்காப்பியம்

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்று இயம்புகிறது. (நூற்பா 1091)

கற்பு என்பது திருமணச் சடங்கோடு பொருந்த கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைமகன் தலைமகளைக் கொடுத்தற்குரிய முறைமையுடையோர் கொடுக்க வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வதாம்.இதுபற்றிக் தொல்காப்பியம் கூறுவது.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே என்பதாம்
(நூற்பா-1088)

காதல் வாழ்வு நடத்தத் தகுதி வாய்ந்த தலைமகனையும் தலைமகளையும் கொடுப்போரும் எடுப்போரும் மனம் ஒப்பித் தெரிவு செய்து பலரும் குழுமியிருக்கும் மன்றில் இருவரையும் வாழ்க்கைத் துணைவர்களாக்குவது கற்பு முறையாகும்.
மணம் மன்றல் வரைவு திருமணம் என்பன காதலர் இருவர் கருத்தும் ஒருமித்தே நடைபெறும். ஆயினும் பண்டு மணமக்களைத் தேர்ந்தெடுக்குங்கால் இன்று நடைமுறையில் உள்ள தித யோகம் கரணம் லக்கினம் யோனி ராசி கிரகம் நட்சத்திரம் திசை புத்தி ஆகிய பத்து வகைப் பொருத்தங்கள் பார்ப்பாரிலர்.
காதல் வாழ்வு நடத்தத் தகுதி வாய்ந்த தலைமகனையும் தலைமகளையும் கொடுப்போரும் எடுப்போரும் மனம் ஒப்பித் தெரிவு செய்து பலரும் குழுமியிருக்கும் மன்றில் இருவரையும் வாழ்க்கைத் துணைவர்களாக்குவது கற்பு முறையாகும்.
மணம் மன்றல் வரைவு திருமணம் என்பன காதலர் இருவர் கருத்தும் ஒருமித்தே நடைபெறும். ஆயினும் பண்டு மணமக்களைத் தேர்ந்தெடுக்குங்கால் இன்று நடைமுறையில் உள்ள தித யோகம் கரணம் லக்கினம் யோனி ராசி கிரகம் நட்சத்திரம் திசை புத்தி ஆகிய பத்து வகைப் பொருத்தங்கள் பார்ப்பாரிலர்.
இன்று பிறப்பியங் கொண்டு ஐந்திறம் பார்த்தும் பொருத்தம் காணும் முறை அன்றில்லை.மணமக்களை ஒருவரையொருவர் நேரில் சந்திக்க வாய்ப்பளிக்காமல் பிறப்பியம் பார்த்து மணமக்களைத் தெரிவு செய்பவர் பலராக உளர்.இம்முறை பண்டைத் தமிழ் மரபுக்கு மாறானதாகும்.தொல்காப்பியர் நூற்பா-1219 பத்துப் பொருத்தங்களை குறிப்பிடுகின்றது.;

பிறப்பு குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்

நிறையே அருளே உணர்வொரு திருவென
முறையுங் கிளந்த ஒப்பினது வகையே என
அறிக.

நாள் கோள் ஒரை நல்லநாள் கெட்டநாள் பார்க்கும் பழக்கம் பண்டைத் தமிழகத்தில் இல்லை.இடைக்காலத்தில் புகுத்தப்பட்டவையே.
இக்காலத்தில் திருமணத்தின் போது அரசாணைக்கால் நடுதல் காலுங்கரகம் வைத்தல் தீவளர்த்து அவிசொரிதல் அம்மி மிதித்தல் அருந்ததி பார்த்தல் தீவலம் வருதல் தாலி கட்டுதல் முதலியன பண்டைத் தமிழர் அறியாதவை.

**துணை நூற்பட்டியல் (References)**


1. தொல்காப்பியம், தமிழர் சமூக அமைப்பு, காதல் (களவு, கற்பு), பண்பாடு ஆகியவற்றை விளக்கும் முதன்மை நூல்.
2. புறநானூறு, வீர வாழ்க்கை, சமூக ஒழுக்கம், அரசியல் நிலை ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.
3. அகநானூறு, காதல் வாழ்க்கை, மனநிலை, ஐந்திணை தொடர்பான தகவல்கள்.
4. குறுந்தொகை, இயற்கை மற்றும் காதல் வாழ்க்கையைச் சுருக்கமாக வெளிப்படுத்தும் பாடல்கள்.
5. நற்றிணை, ஐந்திணை வாழ்வியல் மற்றும் காதல் பண்பாட்டை விளக்கும் நூல்.
6. பதிற்றுப்பத்து, அரசியல், போரியல், வீர வாழ்க்கை பற்றிய தகவல்கள்.
7. சிலப்பதிகாரம், நகர வாழ்க்கை, வாணிபம், சமூகம், பெண்களின் நிலை ஆகியவற்றை விளக்குகிறது.
8. மணிமேகலை, சமயக் கருத்துக்கள் மற்றும் சமூக மாற்றங்களை காட்டும் நூல்.
9. திருக்குறள், அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் மூலம் தமிழர் வாழ்வியல் நெறிகள்.
10. சிந்து வெளி நாகரிகம், திராவிட நாகரிகத்தின் தொன்மை மற்றும் வாழ்க்கை முறையை ஆராய்கிறது.
11. தமிழர் நாகரிகம் – (பல்வேறு ஆய்வாளர்கள்), தமிழர் பண்பாடு, மரபு, சமூக அமைப்பு பற்றிய ஆய்வுகள்.
12. தமிழர் வாழ்க்கை மற்றும் பண்பாடு, பண்டைய மற்றும் நடுக்கால தமிழர் வாழ்க்கை ஒப்பீடு.